# பெற்றோர்களுக்கு!

## கோவிட்19 சூழலில் நம் குழந்தைகள் இணையத்தில் பாதுகாப்பாக உள்ளனரா!

### 6-11 வயதுடைய குழந்தைகளுக்கு

**குழந்தைகளுக்கான இணைய கணக்குகள் :** உங்களுடைய கைப்பேசி, கணினி மற்றும் இணைய தளங்களில் உங்கள் குழந்தைகளின் சுய விவரம் அடங்கிய தனி இணைய கணக்கினை தொடங்கி, அவர்களின் செயல்பாடுகளை கண்காணிப்புக்குள் கொண்டு வந்து, நம் குழந்தைகள் சரியான முறையில் செல்வதை உறுதி செய்ய வேண்டும். மேலும், வயது வரம்புக்குட்படாத நேரலை செயலிகள் மற்றும் காணொலி உருவாக்கும் தளங்களில் குழந்தைகளுக்கு இணைய கணக்குகள் உருவாக்குவதை தவிர்த்தல் நல்லது.

**குழந்தைகளுக்கான யூடியூப் :** குழந்தைகளுக்கான யூடியூப் தளத்தில் அவர்களுக்கேற்ற பதிவுகள், காட்சிகள் இருப்பதால், இதற்கான செயலியை மட்டும் அவர்கள் பயன்படுத்தும் வண்ணம் ஏற்பாடு செய்யலாம்.

**திரை நேரத்தை கண்காணித்தல் :** குழந்தைகள் தொடர்ந்து இணைய தளத்தில் விளையாட்டுகள் மற்றும் படம் பார்ப்பதை தவிர்க்க திரை நேரத்தை செயலிகளில் உள்ள நுணுக்கத்தை பயன்படுத்தி கட்டுப்படுத்த வேண்டும். அது குறித்த ஒரு புரிந்துணர்வை கொண்டு வர குழந்தைகளோடு இணைந்து முடிவெடுக்க வேண்டும் .

**நன்மைக்கான தொழில் நுட்பம் :** இணைய சேவைகளை பொழுதுபோக்கிற்காக மட்டும் பயன்படுத்தாமல், கல்வி, பொது அறிவு, தொழில் முனைவு என பயனுள்ள விதத்தில் கொண்டு செல்ல குழந்தைகளுக்கு வழி காட்டுங்கள்.

**இணைய பயன்பாடு சார்ந்த நம்பிக்கையை உருவாக்குதல் :** இணைய தளத்தில் குழந்தைகள் என்ன செய்கிறார்கள் என்பதை குறித்த கலந்துரையாடல் நடத்தி, பொறுப்பான விதத்தில் அவற்றை பயன்படுத்த கற்றுக்கொடுங்கள். இணைய பயன்பாடு குறித்து நம்பிக்கையான உரையாடலை நடத்துங்கள்.

# பெற்றோர்களுக்கு!

## கோவிட்19 சூழலில் நம் குழந்தைகள் இணையத்தில் பாதுகாப்பாக உள்ளனரா!

**12-17 வயதுடைய குழந்தைகளுக்கு**

**வயது வரம்பு :** அனைத்து செயலிகள் மற்றும் இணைய தளங்கள், அவைகளின் பயன்பாட்டிற்கான வயது வரம்பினை நிர்ணயித்துள்ளன. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் அவர்களின் வயது வரம்புக்குட்பட்ட செயலிகள் மற்றும் இணைய தளங்களை மட்டுமே பயன்படுத்துகின்றனரா என்பதை உறுதி செய்துகொள்வது அவசியம். மேலும், குழந்தைகள் தங்களின் வயது வரம்புக்கு பொருந்தாத செயலிகள் மற்றும் இணைய தளங்களை பயன்படுத்தாதவாறு பெற்றோர்கள் கவனமாக இருத்தல் வேண்டும்.

**இணைய பயன்பாடு குறித்த விதிகளை தெரிந்து கொள்ளுங்கள் :** குழந்தைகள் பயன்படுத்தும் ஊடக தளங்களின் தரம் பயன்பாட்டு நெறிமுறைகளை தெரிந்துகொண்டு குழந்தைகளை அதனடிப்படையில் பயனுள்ள விதத்தில் அத்தளங்களை பயன்படுத்த வழிகாட்டுங்கள்.

**ஆபத்தான அந்நியர்கள் :** இணைய பயன்பாட்டில் அறிமுகமில்லா நபர்களுடன் நட்பு கொள்வது ஆபத்தானது என்பதும், இணையத்தில் தொடர்பு கொள்பவர்கள் உண்மையிலேயே அவர்களாக இருக்க வாய்ப்புகள் குறைவு என்பதையும் நம் குழந்தைகளுக்கு தெளிவு படுத்துங்கள்.

**இணைய அச்சுறுத்தல்கள் :** இணையத்தின் மூலம் இளைஞர்கள் மற்றும் குழந்தைகளை குறிவைத்து தொடரப்படும் பாலியல் சுரண்டல்கள் மற்றும் தொல்லைகள் குறித்து குழந்தைகள் விழிப்பாக இருக்க கற்றுக்கொடுக்க வேண்டும். மேலும், அத்தகைய தொந்தரவுகள் பற்றி முறையான புகார் அளிப்பது குறித்தும் குழந்தைகளுக்கு தெளிவு படுத்த வேண்டும்.

**பிணைப்பு செயல்பாடுகள் :** ஒரே குடும்பமாக அமர்ந்து விளையாடுவது, திரைப்படம் மற்றும் தொடர்கள் பார்ப்பது என இணைய பயன்பாட்டினை இணைந்து பயன்படுத்தும் போது மன அழுத்தம் குறையும். மேலும் நம் மரபு சார்ந்த விளையாட்டுகள், கதை சொல்லுதல் மற்றும் குடும்ப உரையாடல்கள் மூலம் நம் குடும்ப வாழ்வை மேம்படுத்த வேண்டும்.

**குடும்ப புரிந்துணர்வு :** இணைய பயன்பாடு, குடும்ப உரையாடல்கள், கல்வி மற்றும் ஆராய்ச்சி, பொழுதுபோக்கு, உடற்பயிற்சி, உறவினர்களுடன் தொடர்பு போன்றவற்றுக்கு குடும்பத்தில் உள்ள அனைவரும் முக்கியத்துவம் அளித்து ஒரு உன்னதமான புரிதலை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதனால் நமது குடும்பம் மகிழ்வானதாகவும், பாதுகாப்பானதாகவும் அமையும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் இணைய பயன்பாடு மற்றும் இணைய பாதுகாப்பு குறித்த தெளிவுடன் இருத்தல் காலச்சூழலின் அவசியமாக உள்ளது. பெற்றோர்கள் பொறுப்பை உணர்ந்து செயல்பட்டால்தான் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய இயலும்.

Cyber Peace Foundation
unicef for every child
NCPCR